

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண் : 34

## அறிவிப்புகள்

## 2015 - 2016

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மானியக் கோரிக்கை எண்–34**

# அறிவிப்புகள்
# 2015–2016

திரு. **எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

## 16. ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மாநிலத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக நீடித்த நிலைத்த தன்மையுடன் கூடிய ஆறுகளை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

நடப்பு நிதியாண்டில் பின்வரும் 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 2 நகரக குடிநீர் மேம்பாட்டு திட்டங்களும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1. நாமக்கல் மாவட்டம் ஆலம்பாளையம் பேரூராட்சி மற்றும் பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான 2.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் மேப்பேரிபாளையம், அன்னூர் மற்றும் திருப்பூர் மாவட்டம்

அவினாசி ஆகிய மூன்று பேரூராட்சிகளுக்கான 65,600 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3. திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 4753 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 11 பேரூராட்சிகள் 5068 ஊரகக் குடியிருப்புகள், ஆகிய பகுதிகளுக்கான 47.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

4. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ரெட்டியார்பட்டி மற்றும் 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான 27,006 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

5. ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தொகுதியைச் சார்ந்த 8 ஊராட்சிகளிலுள்ள 197 ஊரகக் குடியிருப்புகளுக்கான 52,195 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

6. திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியைச் சார்ந்த 5 பேரூராட்சிகள் மற்றும் 281 ஊரகக் குடியிருப்புகளுக்கான 2.38 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

7. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சி மற்றும் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 475 ஊரகக் குடியிருப்புகளுக்கான 4.96 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

8. திண்டுக்கல் மாவட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சிக்கான 15,140 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

9. தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சிக்கான 78,100 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திரு. **எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்